**சரியான விடை அரையாண்டுத் தேர்வு 2017-18**

1. .(ஈ) பொருளாதாரத்தின்
2. (இ) மின்னனு வணிகம்
3. (ஆ) இடைநிலையர்கள்
4. (ஈ) சுற்றாடும் வியாபாரிகள்
5. (ஆ) நடுத்தர வர்க்கத்தார்
6. (ஈ) பங்காதாயம்
7. (அ) 1844
8. (இ) தொலைத்தொடர்பு வழி வணிகம்
9. (உ) மேற்கூறிய அனைத்தும்
10. (ஆ) கப்பல் இரசீது
11. (இ) மும்பை - தேனா
12. (ஆ) 3
13. (அ) பண்டகப் பொறுப்பாளர் ரசீது
14. (இ) பண்டகசாலை சான்றானை
15. (அ) பணம்
16. (அ) இந்திய ரிசர்வ் வங்கி
17. (ஆ) அட்டவணை வங்கி
18. (ஆ) 150 000
19. (இ) ஆயுள் காப்பீட்டுறுதி
20. (ஈ) 1995

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21.வணிகத்தை வரையறுக்க.** ஜெ. ஸ்டீபன்சன் கருத்துப்படி, “பொருட்களின் பரிமாற்றத்தின் பொழுது உருவாகும் ஆள்சார் தடை, இடத்தடை, காலத்தடை போன்றவற்றை அகற்றும் நடைமுறைச் செயல்களில் ஈடுபட்டு மேற்கொள்ளும் எல்லாக் கூட்டுச் செயல்களைத்தான் வணிகம் என்பர்.

**22.ஈ-வணிகம்:** மின் அணு வணிகமாகும். செய்தித்துறையின் இணையம்மூலமாக நுகர்வோருடன் நேரடியாக வணிகத்தொடர்பு கொள்வதையே ஈ-வணிகம் என்பர்.

**23. வியாபாரத்தின் வகைகள்:**இரண்டு வகைகள் 1) உள்ளூர் அல்லது உள் நாடு அல்லது சொந்த வியாபாரம். 2) வெளியூர் அல்லது வெளிநாடு அல்லது பன்னாட்டு வியாபாரம்.

**24. அஞ்சல் வழி வாணிகம்**: 1) இது அஞ்சல் மூலமாக வியாபாரம் செய்தலைக் குறிக்கும். 2)நாடு முழுவதும் நுகர்வோர் பரவியிருப்பதனால் அவர்கள் அனைவரும் தமக்குத் தேவையான பொருட்களை அஞ்சல் மூலம் ஆணையிட்டு பெற்றுக் கொள்ளலாம்.

**25.இணையம்:** 1) இணையம் என்பது உலகளாவிய கணினிகளின் வலையமைப்பு ஆகும். 2)இது அளவில்லாத தகவல்களை அளித்து வருகிறது. 3)உலக அளவில் உயர்திறன் கொண்ட கணினிகளின் வலையமைப்பு தொகுப்பாகும்.

**26. மறுஏற்றுமதி வணிகம்:** ஒரு நாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து, அவற்றை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதே மறு ஏற்றுமதி வியாபாரம் எனப்படும்.

**27. போக்குவரத்து - வரைவிலக்கணம்:** கே.கே. செக்சேனாவின் கூற்றுபடி, ஓர் இருட்டறையில், மெழுகு வர்த்தியின் ஒளி பரவுவது போல, போக்குவரத்து அந்தந்த பகுதிகளில் தனது சேவையை ஆற்றுகிறது.

**28. பண்டகக் காப்பகத்தின் தேவை:** 1)பண்டகக் காப்பு காலத் தடைகளை விலக்குகிறது. பண்டகக் காப்பு இலையென்றால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் உபயோகமற்றதாக ஆகிவிடும். 2) எதிர் காலத் தேவையை பொருத்தே உற்பத்தி செய்யப்படுகிறது. பண்டகக் காப்பகங்கள் உதவியால் பொருள்கள் பெருமளவு உற்பத்தி செய்யப்பட்டு எதிர்காலத் தேவைகளுக்காக சேமித்து வைக்கப்படுகிறது. 3)விரைவில் அழுகும் தன்மையுள்ள பொருட்களை குளிர் பதன வைப்பிடத்தில் வைப்பதன் மூலம் ஓரளவு நுகர்வு காலத்தை நீட்டிக்க முடிகிறது. 4)சில பொருட்கள் குறிப்பிட்ட பருவ காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும். ஆனால் அதன் நுகர்வு வருடம் முழுவதும் தொடர்ந்து இருக்கும். அத்தகைய பொருட்களை பண்டகக் காப்பகம் செய்ய அவசியமாகிறது.

**29. நாட்டுப்புற வங்கியர்:** 1)தனித்து இயங்கும் உள்நாட்டு வங்கியர்கள் நாட்டுப்புற வங்கியர்கள் என அழைக்கப்படுகின்றனர். 2)இவர்கள் இந்திய மைய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் வராதவர்கள். எ.கா. கடன் வழங்கும் மார்வாடிகள், செட்டியார்கள், நகை அடகுபிடிப்போர்.

**30. காப்பீடு எடுப்பதற்க்கான தேவைகள்:** வாணிகம், சொத்து, மனித வாழ்க்கை இவற்றைத் தழுவியுள்ள இடர்பாடுகளுக்கு எதிராகப் பாதுகாப்பு அளிப்பதே காப்பீடு, வாணிபம் பல இடர்பாடுகளைக் கொண்டுள்ளது. வாணிகத்தில் பொருட்கள் வெவ்வேறு இடங்களுக்கு அனுப்புதலின்போதோ, கிடங்குகளில் சேமித்திருக்கும் போதோ தீ விபத்து, திருட்டு போன்றவற்றால் அழிவுறலாம் அல்லது சேதமடையலாம். இவ்வகை இடர்ப்பாட்டினைக் காப்பீடு செய்வதன் மூலம் குறைத்துக் கொள்ள முடிகிறது.

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

| **31. முகவர்கள் ( இடையீட்டாளர் )** | **தரகர்கள்** |
|---|---|
| முதல்வர் ஒருவரால் அவர் சார்பாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள நியமிக்கப்படுபவர் முகவர் | வாங்குபவரையும் விற்பவரையும் ஒன்று இணைத்து வியாபாரத்தை முடிக்க பேரம் பேசும் நபர் தரகர் ஆவார். |
| தம் பெயரிலேயே செயல்படுவார். | உரிமையாளர் சார்பாக செயல்படுவார். |
| விற்பனைத் தொகையை பெற முடியம். | விற்பனைத் தொகையை பெற முடியாது. |

**32. பண்டமாற்று முறையில் உள்ள இடையூறுகள்(ஏதேனும்3) அ.இருவருடைய தேவைகள் உடன்பாடில்லாமல் இருத்தல் :** பண்டமாற்றத்தில் ஈடுபடும் இருவரின் தேவைகள் ஒத்துப்போக வேண்டியது அவசியமாகும். ஒருவரிடம் உள்ள பொருள்கள் மற்றொருவருக்கு தேவையுடையதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒருவர் தன்னிடம் உள்ள பொருளை மற்றொருவருக்குக் கொடுத்து தனக்கு வேண்டிய பொருளை அவரிடமிருந்து பெறமுடியும். இல்லையென்றால் அவர்களிடம் பண்டமாற்றம் நடைபெறாது. **ஆ. பொதுவான அளவைக் குறைபாடும் - மாற்றுப் பொருள் குறைபாடும் :** பண்டமாற்று முறையில் பொதுவான அளவைகள் ஏதும் பின்பற்றப் படவில்லை. ஒவ்வொரு மாற்றுப் பொருளுக்கும் தனித் தனி மதிப்புண்டு. ஆனால் மதிப்பீட்டில் யாதொரு பொதுமதிப்பும் பின்பற்றப் படுவதில்லை. **இ. உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையில் இருக்கவேண்டிய நேரடித் தொடர்பின்மை :** விற்போரும் வாங்குவோரும் நேருக்கு நேராக கட்டாயம் சந்திக்க வேண்டியது அவசியம். மிகப் பெரிய சந்தை விற்பனைக் கூடத்தில் இத்தகு சந்திப்புகள் எப்பொழுதும் ஏற்படுவது இயலாது. **ஈ. கூடுதல் இருப்பு வைக்க இயலாத நிலைமை :** ஒருவர் தனக்குத் தேவையான அளவு பொருளை இருப்பு வைத்துக் கொண்டு, உபரியாக உள்ள பொருளை மட்டுமே பரிமாற்றம் செய்ய முடியும். எனவே இம்முறை வணிகத்தில் கூடுதலான பொருள் இருப்பு இருக்க வேண்டியது அவசியம். இது எப்பொழுதும் சாத்தியமாகக் கூடியது அன்று.

**33. மின்னனு - வாணிகத்தின் குறைபாடுகள் ஏதேனும் (3)** 1)நுகர்வோர்கள் இவ்வணிகத்தில் ஈடுபட தயக்கம் காட்டுகிறார்கள். காரணம் கடன் அட்டை செலுத்தும் முறையில் நடக்கும் மோசடிகளே ஆகும். 2)அழியும் பொருட்களான மீன், காய்கறிகள், பூக்கள் போன்றவற்றின் வியாபாரத்திற்கு இம்முறை ஏற்புடையது அல்ல. 3)நல்ல முறையில் ஆய்வு செய்து வாங்கக்கூடிய பொருட்களுக்கு இம்முறை பொருந்தாது. 4)மிகக் குறைவான மக்களே இணையதளத்தைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் அவர்கள் பயன்படுத்தும் முறை திருப்திகரமாக இல்லை. 5)பல சூழ்நிலைகளில் இவற்றிற்கான செலவு அதிகமாகவே இருக்கிறது. 6)பரிமாற்றம் செய்யப்படும் பொருட்களின் தரம், அளவு போன்றவற்றை அவற்றின் உண்மையான மதிப்பிற்கு மதிப்பீடு செய்யவும் முடியவில்லை.

**35. போக்குவரத்தின் ஏதாவது மூன்று பொருளாதாரப் பயன்பாடுகள்:** 1)மக்கள் மற்றும் பொருள்கள், இடம் விட்டு இடமும், நாடு விட்டு நாடும், செல்வதற்கு போக்குவரத்து வசதியளிக்கிறது. உழைப்பும் முதலும் இலாபகரமாகப் பயன்படுத்துவதற்கு இது உதவுகிறது. 2)பலவிதமான நுகர்வோர், மூலதனப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கும் மற்றும் அதன் அளவை அதிகரிப்பதற்கும் ஊக்கம் அளிக்கிறது. 3) உற்பத்தித் திறனை வளர்க்கிறது

| 34. உள்நாட்டு வணிகம் | அயல் நாட்டு வணிகம் |
|---|---|
| ஒரு நாட்டின் உள்ளேயே நடைபெறும் வணிகத்தைக் குறிக்கும். | பல்வேறு நாடுகளுக்கிடையேயான வணிகத்தைக் குறிக்கும். |
| பொருள் மற்றும் சேவை பரிமாற்றம், உள் நாட்டிலேயே உள்ளடக்கியுள்ளது. | பல்வேறு நாடுகளுக்கிடையே பொருள் மற்றும் சேவை பரிமாற்றத்தை உள்ளடக்கியுள்ளது. |
| இதில் வெவ்வேறு நாடுகளின் பணப்பரிமாற்றம் இல்லை. | இதில் வெவ்வேறு நாடுகளின் பணப்பரிமாற்றம் உண்டு. |
| இதில் போக்குவரத்து இடர்பாடுகள் குறைவாகவே உள்ளது. | இதில் போக்குவரத்து இடர்பாடுகள் அதிகமாக உள்ளது. |

**36. பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் : 1. தனிசிறப்புத் தன்மைக்கு இட்டுச் செல்கிறது:** ஒருநாடு வேலை பகிர்வு மற்றும் புதிய உற்பத்தி முறைகள் காரணமாக, பொருள்களை பிறநாட்டை ஒப்பிடும் போது குறைந்த அடக்கவிலையில் உற்பத்தி செய்ய முடிகிறது. ஆகவே, பன்னாட்டு வணிகம், ஒரு நாடு தனிச்சிறப்புத்தன்மை அடைவதற்கு உதவுவதோடு, பல்வேறு பொருள்கள் பல்வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்படுவதை ஊக்குவிக்கிறது, ஒரு நாடு தன்னிடமுள்ள வளங்களை சரியான முறையில் பயன்படுத்தும் போது அந்நாட்டிற்கு அதிகபட்ச வருமானம் கிடைக்குமாறு செய்கிறது. **2. எல்லா வகையான பொருள்களை பெறுவதை சாத்தியமாக்குகிறது:** ஒரு நாடு தன்னால் உற்பத்தி செய்ய முடியாத பொருள்களை, பிற நாட்டிலிருந்து பெறுவதை பன்னாட்டு வணிகம் சாத்தியமாக்குகிறது. ஒரு நாடு எந்த ஒரு பொருளையும், பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய பன்னாட்டு வணிகம் உதவுகிறது.**3. பேரளவு உற்பத்தி பயன்களை தருகிறது :** உள்நாட்டு நுகர்ச்சிக்கு மட்டுமின்றி, ஏற்றுமதிக்காவும் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆகவே, பேரளவில் உற்பத்தி நடைபெறுகிறது. இவ்வாறாக குறைந்த அடக்கவிலை, உயர்ந்த தரம், உற்பத்தி காரணிகளை முழுமையாக பயன்படுத்துதல் ஆகிய நன்மைகளை பன்னாட்டு வணிகத்தால் பெற முடிகிறது.**4. விலைவாசியை நிலைப்படுத்துதல் :** தேவைப்படும் நாடுகளுக்கு பொருட்களை வழங்குவதால் பன்னாட்டு வணிகம் பொருட்களின் விலையை உலகம் முழுவதும் சீராக்குகிறது.**5. தரத்தை உயர்த்துதல் :** உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், உள்ள போட்டி காரணமாக பன்னாட்டு வணிகம் பொருள்களின் தரத்தை உயர்த்துகிறது. இதனால், உலகெங்கிலும் உள்ள நுகர்வோர் உயர்ந்த தரமுள்ள பொருள்களை குறைந்த விலையில் பெறமுடிகிறது. **6. வளங்களை உத்தம அளவிற்கு பயன்படுத்தும் நிலைமை ஏற்படுத்துகிறது :** சிறந்த உற்பத்தி முறைகளால், ஒரு நாடு தன்னிடமுளள அரிதான வளங்களை சிக்கனமாக பயன்படுத்தி, பொருள்களை உற்பத்தி செய்ய முடிகிறது. ஆகவே, வளங்கள் வீணாவது தடுக்கப்படுகிறது. இவ்வாறாக, பன்னாட்டு வணிகம், ஒவ்வொரு நாடும் தன்னிடமுள்ள இயற்கை வளங்களை உத்தம அளவிற்கு பயன்படுத்துவதற்கு உதவுகிறது. **7. தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் புதிய தொழிற்சாலைகள் துவக்கம்:** வளர்ந்த நாடுகள் தங்களிடம் உள்ள தொழில்நுட்பம், இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வளர்ந்து வரும் மற்றும் வளம் குன்றிய நாடுகளுக்கு தரமுடிகிறது. இது இறக்குமதி செய்யும் நாடுகளில் புதிய தொழிற்சாலைகள் உருவாவதற்கு உதவுகிறது.**8. வேலைவாய்ப்புகளை அதிகரிக்கிறது:** வெளிநாட்டு உதவியுடன் நவீன தொழில்நுட்பத்துடன் ஏற்றுமதி சம்பந்தப்பட்ட துறை மற்றும் பிற துறைகளிலும் புதிய தொழிற்சாலைகள் நிறுவப்படுவதால், வேலை வாய்ப்புகள் அதிகரிக்கின்றது. இவ்வாறு பன்னாட்டு வணிகம் புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது. **9. தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகள் மேம்பாடு:** பலவிதமான நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதை பன்னாட்டு வணிகம் சாத்தியமாக்குகிறது. இக்காலத்தில் இணைய வசதிகள், மதிப்பு மிக்க வியாபார தகவல்களை பரிமாறி கொள்வதற்கு உதவுகிறது. பல்வேறு வகையான போக்குவரத்து சாதனங்கள் மேம்பாடு அடைவதற்கும் பன்னாட்டு வணிகம் உதவுகிறது.

**10. சர்வதேச அளவில் ஒருவரையொருவர் நன்றாக புரிந்து கொள்வதற்கு உதவுகிறது :** பல்வேறு நாடுகளிடையே நல்ல தொடர்பு, நல்லெண்ணம் ஏற்படுவதற்கு பன்னாட்டு வணிகம் உதவுகிறது. இது பரஸ்பர உதவி, மற்றும் ஒருவருடைய பிரச்சனையை மற்றவர்கள் புரிந்து கொள்ளுதல் ஆகிய நன்மைகளை தருவதோடு, உலக அமைதியையும் மேம்படுத்துகிறது.

**37. பண்டக காப்பு ஆவணங்கள்:** 1) பண்டகசான்றானை 2) கப்பல் சான்றாணை 3) கப்பல் ரசீது 4) வழங்கு ஆணை 5) பண்டக காப்பாளரின் ரசீது

**38.காசோலையின் தன்மைகள்( ஏதேனும் 3) :** 1)**காசோலை என்பது ஓர் எழுதப்பட்ட ஆவணம்** :பென்சிலால் எழுதப்படுவது அனுமதிக்கப்படுவதில்லை. பேனாவில் எழுத வேண்டுமென வாடிக்கையாளரை வங்கி கேட்டுக் கொள்கிறது. 2)**நிபந்தனையற்ற ஆணை:** காசோலை பணத்தை செலுத்த ஆணையிடும் ஒன்றாகத்தான் இருக்கவேண்டுமே தவிர, நிபந்தனை எதையும் தாங்கியதாக இருக்கக் கூடாது. 3)**குறிப்பிட்ட வங்கியர் மீது எழுதப்படுவது :** காசோலை குறிப்பிட்ட வங்கியர் மீதுதான் எழுதப்பட வேண்டுமே தவிர, தனிநபர் மீதோ, நிறுவனத்தினர் மீதோ எழுதுதல் கூடாது. 4)**குறிப்பிட்ட தொகை மட்டும் :** வங்கியரால் தரப்படுமாறு ஆணையிடப்பட்ட பணம் அல்லது தொகை, தெளிவாகக் குறிப்பிட்ட தொகையாகவும், பணமாகவும் மட்டுமே இருத்தல் வேண்டும். **5)எழுதுவோர் கையெழுத்து:** காசோலையை எழுதுபவர் வங்கியரிடமுள்ள மாதிரிக் கையெழுத்துடன் ஒத்து இருக்கும் வகையில், தனது கையொப்பத்தை தெளிவாக இடவேண்டும். **6)கேட்கும் போது தரப்பட வேண்டியது :** காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகை கேட்கும்போது மட்டுமே தரப்பட வேண்டும். கேட்கப்படாத காசோலைக்கு பணம் தரப்பட வேண்டியது இல்லை. **7)பணம் பெறும் நபர் ஒரு குறிப்பிட்ட நபராக இருக்க வேண்டும் :** யாருக்கு பணம் தரப்பட வேண்டுமோ அவரது பெயர் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

**39. தானியங்கி பணம் வழங்கும் கருவியின் பயன்கள் (ஏதேனும் 3) :** 1) இது நாள் முழுவதும் சேவை புரிவதால், வங்கி நடவடிக்கை நேரம் வெகுவாக மிச்சப்படுத்தப்படுகிறது.2.துரிதமான,திறமையான, தவறுகளற்ற சேவை கிடைக்கிறது. 3. வலைப்பின்னல் மூலமாக, அட்டை வைத்திருப்பவர் எந்த இடத்திலிருந்தும் ரொக்கம் மற்றும் பல சேவைகளை பெறலாம். 4. வங்கியின் எந்த கிளைக்கும் பணத்தை சுலபமாக மாற்றம் செய்யலாம். 5. எந்த நேரத்திலும் பணம் எடுக்கலாம் என்பதால்,"எங்கும் கிடைக்கும் வங்கிவசதி" என்றும் கூறலாம்.

**40.ஆயுள் காப்பீட்டு திட்டாவணம் ஐந்து வகைகள்** 1. திட்டாவண காலத்தின் அடிப்படையில் 2. முனைமம் செலுத்தும் முறையின் அடிப்படையில் 3. இலாபத்தில் பங்கு கொள்ளும் அடிப்படையில் 4. நபர்களின் அடிப்படையில்
5. இழப்பீடு தொகை கோரும் அடிப்படையில்

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ வணிகத்தின் தடைகள் யாவை? அவை எவ்வாறு நீக்கப்படுகின்றன. 1. ஆள்சார் தடை** உற்பத்தியாளர்கள் எண்ணிக்கையில் மிகக்குறைந்தவர்களே. அவர்கள் ஒரு நூறாயிரம் நுகர்வோர் கூட்டத்திலிருந்து தனித்துப் பிரிந்திருப்பவர்கள். உற்பத்தியாளர்கள் எப்பொழுதும் நேரிடையாக நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாது. எனவே, உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இந்தக் குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். தொழில் வல்லுநர் மற்றும் தொழில்முறை இடைநிலையாளர்கள் வணிகப் பொருட்களை வாங்கும் மற்றும் விற்கும் நடைமுறை பணிகளில் நேரிடையாக ஈடுபட்டுள்ளனர். அவர்களே உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்க்கும் இடையே தேவைப்படும் தொடர்பை ஏற்படுத்தி வருகின்றனர். **2. இடத்தடை** பொருட்கள் மிகக்குறைந்த ஒரு சில இடங்களில் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், இதனைப் பயன்படுத்த விரும்பும் நுகர்வோரோ நாட்டின் பல்வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். உற்பத்தியாளரும், நுகர்வோரும் புவி அமைப்பின்படி தனித் தனியாக இருக்க வேண்டியுள்ளது. இதனைப், போக்க போக்குவரத்து சாதனங்கள் பேருதவியாக உள்ளன. **3. காலத் தடை** ஒரு குறிப்பிட்ட பருவ காலத்தில் மட்டுமே உற்பத்தியாகும் சில பொருட்களுக்கு ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். எடுத்துக்காட்டாக,

உணவு தானியங்கள், பருத்தி முதலானவை குறிப்பிட்ட காலங்களில் விளைவிக்கப்பட்டு ஆண்டு முழுவதும் நுகரப்படுகின்றன. ஒரு சில பொருட்கள் குறிப்பிட்ட பருவகாலங்களில் தான் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், அதற்கு முன்பே தயாரிக்கப்பட்டு மிகுதியாக இருப்பு வைத்துக்கொள்ளப்படுகிறது. உற்பத்திப் பொருட்கள் நுகர்வுக்குத் தேவைப்படும் பொழுதும், வாங்க விரும்பும் பொழுதும் கிடைக்க வேண்டும். இத்தேவையைப் பூர்த்தி செய்ய பண்டகங்கள் பெரிதும் உதவி புரிகின்றன. **4. இடர்பாட்டுத் தடை** ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க கொண்டு செல்லும் போதோ, இருப்பு வைத்திருக்கும் போதோ பொருட்களுக்கு சேதம் ஏற்பட வாய்ப்பு உண்டு. தீப்பிடித்தல், புயல் போன்ற பல்வேறு வகையான இயற்கைச் சீற்றங்கள் மற்றும் விபத்துக்கள் ஏற்படுவதாலும் இழப்பு ஏற்படுகின்றன. இவ்விதத் தடைகள் காப்பீட்டின் மூலம் நிவர்த்தி செய்யப்படுகின்றன.**5. அறிவுசார் தடை** சந்தை நிலவரங்களை பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் மிகச் சிறந்த பொருட்களை வாங்க முடியாமல் போய்விடக்கூடும். இதை அறிவுசார் தடை என்று கூறலாம். சரியான விளம்பரம் மற்றும் விற்பனையாளர் பணி முறையாக அமையாவிடில் இத்தகு குறைபாடுகள் ஏற்படும்.

**6.நிதித் தடை** உற்பத்தியாளர் நுகர்வோருக்கு ஏற்றமுறையில் எல்லாப் பொருட்களையும் உற்பத்தி செய்து அனுப்பும் அளவிற்கு நிதி நிலைமை வசதியாக இருத்தல் வேண்டும். எத்தகு தடைகளின்றி தொடர்ந்து உற்பத்தியாளர் பொருட்களை தயார் செய்து சந்தையில் தடையின்றி நுகர்வோர்க்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நடைமுறை மூலதன தேவைக்காக வங்கிகளும், பிற நிதி நிறுவனங்களும் சில குறிப்பிட்ட விதி முறைகளோடும் தக்க பிணையத்தோடும் வணிகர்களுக்குத் தேவைப்படும் நிதிகளை வழங்கி வருவதால் இத்தகு நிதிசார்தடை ஏற்படாவண்ணம் தவிர்க்கலாம்.

**41ஆ. மைய வங்கியின் பணிகள்** 1.**ரூபாய் நோட்டு வெளியிடுதல்:** இந்திய மைய வங்கி ஒரு ரூபாய் நோட்டு, ஒரு ரூபாய் நாணயம் மற்றும் அதற்கு குறைந்த நாணயங்களைத் தவிர, அனைத்து ரூபாய் நோட்டுகளையும் அச்சிட்டு வெளியிடுவதற்கான தனி அதிகாரம் உடையது.

**2.அரசின் வங்கியர்:** இந்திய மைய வங்கி அரசின் வங்கியராகவும், முகவராகவும் செயல்படுகிறது. இது கீழ்கண்ட சேவைகளை வழங்குகிறது. அ. அரசின் ரொக்கக் கையிருப்பை கையாளுதல் மற்றும் பேணுதல். ஆ. அரசின் சார்பாக பணத்தை பெறுதல் மற்றும் செலுத்துதல். இ. அரசு பத்திரங்களை வாங்குதல் மற்றும் விற்றல். ஈ. அரசின் சார்பாக கருவூல உண்டியல்களை விற்பனை செய்தல். உ. ஐந்தாண்டு திட்டங்களுக்கான நிதி வழங்குதல், நாட்டின் அந்நிய செலுத்துநிலை செலாவணி சம்பந்தமான விவகாரங்களில் அரசுக்கு ஆலோசனை அளித்தல்.

**3.வங்கியர்களின் வங்கி:** வங்கி ஒழுங்காற்றுச் சட்டம் 1949-ன்படி, ஒவ்வொரு வங்கியும், இந்திய மைய வங்கியிடம் ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்ச ரொக்க கையிருப்பை வைத்திருப்பது கட்டாயமாகும். இதைத்தான் ரொக்க இருப்பு வீதம் என்கிறோம். பட்டியலிலுள்ள வங்கிகள் இந்திய மைய வங்கியிடமிருந்து தகுதியான பிணையங்களின் அடிப்படையிலும் மற்றும் உண்டியல்களை மறு வட்டம் செய்வதன் மூலமும் கடன் உதவி பெறலாம்.இவ்வாறாக இது வங்கியர்களின் வங்கியாக செயல்படுகிறது. **4.கடன் கட்டுப்பாட்டாளர்:** நாட்டில் சீரான விலைவாசிகளை பேணுவதற்காக, இந்திய மைய வங்கி பணப் புழக்கத்தையும், கடனையும் கட்டுப்படுத்துகிறது. பின்வரும் முறைகளை கையாண்டு இவ்வங்கி வணிகவங்கிகள் வழங்கும் கடனை கட்டுப்படுத்துகிறது. பல்வகை கடன் கட்டுப்பாட்டு முறைகள்:**1.கடனளவு கட்டுப்பாட்டு முறைகள்:**இம்முறையில் மைய வங்கி, வணிக வங்கிகளால் அளிக்கப்படும் கடன் அளவை கீழ்கண்ட கருவிகளின் மூலம் கட்டுப்படுத்துகிறது. **அ. வங்கி வீதம் :**இது உண்டியல்களை, வங்கிகள் மத்திய வங்கியிடம் வட்டம் மற்றும் மறுவட்டம் செய்து கழிவு வீதத்தை குறிக்கிறது. **ஆ. வெளிஅங்காடி நடவடிக்கைகள் :** மத்திய வங்கியானது நேரடியாக வெளி அங்காடிகளில் அரசு பத்திரங்களை வாங்குதலும், விற்றலும், வெளி அங்காடி நடவடிக்கைகள் எனப்படுகிறது. பணவீக்கத்தின் போது மைய வங்கி பத்திரங்களை விற்கிறது. பணவாட்டத்தின் போது மைய வங்கி பத்திரங்களை வாங்கி, வணிக வங்கிகளுக்கு ரொக்கமளிக்கிறது. **இ. சட்டபூர்வ ரொக்க வீத மாறுதல்:** ஒவ்வொரு வணிக வங்கியும் தன்னிடமுள்ள மொத்த இட்டு வைப்புகளின் அளவை பொறுத்து ஒரு குறைந்தபட்ச ரொக்க கையிருப்பை இந்திய மைய வங்கியிடம் இட்டு வைத்திருக்க வேண்டியது அவசியம். பணவீக்க காலத்தில் இவ்வீதம் உயர்த்தப்படுகிறது. பணவாட்டத்தின்போது இவ்வீதம் குறைக்கப்படுகிறது.

**42.அ சரியான வழங்கல் வழியை தீர்மானிக்கும் காரணிகள்:**

**1.உற்பத்திக் காரணி** உற்பத்திப் பொருட்களின் தன்மை மற்றும் வகைகள், வழங்கல் வழியை தீர்மானிக்கின்றன. விலை உயர்ந்த உற்பத்திப் பொருளை நடுத்தர வர்க்கத்தினர் மிகக் குறைந்த அளவிலேயே வைத்திருப்பர். அழுகிக் கெடும் பொருட்கள், நுகர்வோரை எளிதாகவும், விரைவாகவும் போய்ச் சேர்தல், வேண்டும் **2.சந்தை காரணி**: சந்தையின் தன்மை மற்றும் வகைகள் வழங்கல் வழியை தீர்மானிக்கிறது. அதிக இடங்களில் விற்கப்பட வேண்டிய எந்த ஒரு பொருளுக்கும் நீண்ட வழங்கல் வழி தேவைப்படுகிறது. குறைவான இடங்களில் விற்கப்படும் பொருள்களுக்கு அதிக அளவிலான இடைநிலையர்கள் தேவைப்படுவதில்லை. **3.நுகர்வோர் காரணி:** நுகர்வோரின் எண்ணிக்கையும் வழங்கல் வழியை தீர்மானிக்கும் காரணியாக விளங்குகிறது. நுகர்வோர் எண்ணிக்கைக் குறைவாக இருந்து, ஒரு குறிப்பிட்ட மையப் பகுதியில் நுகர்வோர் வாழ்ந்து வருவோராயின் நேரடி வியாபாரம் மிக எளிதாகவும் சிக்கனமாகவும் இருக்கும். நுகர்வோரின் எண்ணிக்கை மிகுதியாக இருந்து பல்வேறு இடங்களில் பரவலாக வாழ்ந்து வருவோராயின், இடைநிலையர்கள் சந்தையிடலுக்குப் பெரிதும் உதவுகின்றனர்**4. இடைநிலையர் காரணி:** இடைநிலையருக்கு வழங்கப்படும் விற்பனை கழிவு இடைநிலையர்களை தீர்மானிக்கும் முன்னதாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.ஏனெனில், அவர்களது கழிவுத் தொகை அதிகரிக்க நேரிட்டால் பொருட்களின் விற்பனை விலையும் அதிகரிக்க நேரிடும். எனவே இடைநிலையர்கள் நியமனமும் அளவோடுதான் இருக்க வேண்டும். இல்லையெனில் பொருட்களின் விற்பனை விலை உயர்வால், எதிர் விளைவுகள் ஏற்படக்கூடும்.

**5.உற்பத்தியாளர் காரணி:** உற்பத்தியாளருக்கு உள்ள நிதி வசதியும் வழங்கல் வழியை தீர்மானிக்கிறது. அதிக அளவில் பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் தானே நேரடியாக சில்லறை விற்பனை நிலையங்களை திறக்க விரும்புவார். அதே சமயம் சிறு உற்பத்தியாளர் இடைநிலையர்களை சார்ந்தே இருப்பார்.

**42.ஆ காசோலை மறுப்பு: 1.எழுதியவர் தடைசெய்தால் :** வாடிக்கையாளர் தன்னால் கொடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட காசோலைக்கு பணம் தர வேண்டாம் என்று வங்கியரை பணிக்கலாம். இதை நாம் பணம் தருதலை நிறுத்துதல் அல்லது தடை செய்தல் என்கிறோம். **2. வாடிக்கையாளரின் இறப்பு பற்றிய தகவல்:** வங்கியர், வாடிக்கையாளரின் இறப்பு பற்றிய அறிவிப்பையோ அல்லது தகவலையோ பெற்றால் அதன்பின், வாடிக்கையாளர் இறப்பதற்கு முன்கொடுத்த காசோலைகளுக்கு பணம் தரக்கூடாது. """"காசோலை எழுதியவர் இறந்துவிட்டார்"" என்ற குறிப்புடன் அக்காசோலைகளை திருப்பி அனுப்பிவிட வேண்டும். **3. வாடிக்கையாளர் புத்திசுவாதீனம் இன்மை :** வாடிக்கையாளர் புத்திசுவாதீனம் இன்மை பற்றிய அறிவிப்பையோ அல்லது தகவலையோ பெற்றால், அதன்பின் வங்கியர் அவரால் கொடுக்கப்பட்ட காசோலைகளுக்கு பணம் தரக்கூடாது. **4. நொடிப்புநிலை**: வங்கியர் தனது வாடிக்கையாளர் பணமின்றி நொடிப்பு நிலை அடைந்துவிட்டார் என்பது தெரியவரும்போது அவரது காசோலைகளுக்கு பணம் தரக்கூடாது. **5. நீதிமன்ற உத்தரவு:** வாடிக்கையாளரின் சொத்துக்கள் பிணையாக நீதிமன்ற ஆணையில் இணைக்கப்பட்டிருந்தால் வங்கியர் அவரது காசோலைகளுக்கு பணம் தரக்கூடாது. இவ்வித நீதிமன்ற ஆணையை """"கார்னிஷ் உத்தரவு"" என்கிறோம். **6. ஒதுக்கீட்டு நியமன அறிவிப்பு :** வங்கியர் ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கிலுள்ள பணத்தினை இன்னொருவருக்கு ஒதுக்கீட்டு நியமனம் செய்த தகவல் பெறும்போது, அவரது காசோலைகளுக்கு பணம் தரக்கூடாது. **7. அறக்கட்டளை விதிகளை மீறுதல் :** வங்கியர் அறக்கட்டளையின் பொறுப்பிலுள்ள தனது வாடிக்கையாளர் அறக்கட்டளையின் விதிகளை மீறி அதன் நிதிகளை தவறான வழிகளில் பயன்படுத்துவது தெரியவரும் போது,

அவரது காசோலைகளுக்கு பணம் தரக்கூடாது. 8. **காசோலை கொணர்பவரின் உரிமை குறைபாடு தெரியவரும் போது** : காசோலையை கொணர்பவர், அதன் உண்மையான உரிமையாளர் அல்ல என்று நம்பும்போது அக்காசோலைக்கு பணம் தரக்கூடாது.
9. **போதிய நிதியின்மை:** வாடிக்கையாளரின் கணக்கில் போதுமான அளவு பணம் இல்லாத போது, வங்கியர் பணம் தர மறுக்கலாம். 10. **பின் தேதியிட்ட காசோலை** : காசோலையில் எதிர்வரும் தேதி குறிப்பிட்டு இருந்தால், அதற்கு வங்கியர் பணம் தரக்கூடாது. 11. **காலாவதியான காசோலை**: ஒரு காசோலையானது 6 மாதத்திற்கும் மேலாக புழக்கத்திலிருந்த பின், வங்கியரிடம் வரும்பொழுது பழமையான அல்லது காலக்கெடு முடிந்த காசோலை என்று குறிக்கப்படுகிறது. இதற்கு வங்கியர் பணம் தரக்கூடாது.
12. **கையொப்பம் மாறுதல்:** வாடிக்கையாளரின் மாதிரி கையொப்பத்திற்கும், காசோலையிலுள்ள அவரது கையொப்பத்திற்குமிடையே மாற்றம் காணப்படின், வங்கியர் அதற்கு பணம் தரக்கூடாது.13. **முறைகேடான மேலெழுதுதல்:** காசோலையின் பின்புறமுள்ள பின்எழுதுதல் முறைகேடாக இருந்தால், வங்கியர் அதற்கு பணம் தரக்கூடாது. 14. **எண்ணும் எழுத்தும் மாறும்போது** : காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை எண்ணாலும், எழுத்தாலும் மாறுபடும்பொழுது வங்கியர் அதற்கு பணம் தரக்கூடாது.15. **திருத்தங்கள்** : காசோலைகளில் திருத்தங்கள் இருந்து, அவைகள் காசோலை எழுதியவரால் தனது முழு கையொப்பத்துடன் உறுதி செய்யப்படாமலிருந்தால், வங்கியர் அதற்கு பணம் தரக்கூடாது. 16. **காசோலை உருவம்:** காசோலையானது முறைப்படி எழுதப்படவில்லையெனில், வங்கியர் அதற்கு பணம் தரக்கூடாது.

| 43.அ துறைவாரிப் பண்டக சாலை | மடங்கு கடை |
|---|---|
| ஒரே கட்டிடத்தில் பல துறைகளுடன் செயல்படுகிறது | பல்வேறு பகுதிகளில் கிளைகளை தோற்றுவிப்பது |
| பெரியநகரங்களின் மையப்பகுதிகளில் அமைக்கப்படுகின்றன. | பொதுவாக வாடிக்கையாளர்களின் வசிக்கும் இடங்களின் அருகில் அமைக்கப்படுகிறது. |
| எண்ணற்ற வகைப் பொருட்கள் இங்கு விற்பனைக்கு செய்யப் படுகின்றன. வாடிக்கையாளர்களின் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்யப்படும். | ஒரு குறிப்பிட்ட வகைப் பொருள்களை மட்டுமே இங்கு விற்பனை செய்யப் படுகிறன. |
| இந்த பண்டகச் சாலையை தொடங்கும் போது பல பிரச்சனைகளை ஆரம்பத்தில் எதிர்கொள்ள வேண்டும். | எப்பகுதியிலும் இதை தொடங்குவது மிகவும் எளிது. அவ்வாறு நட்டம் ஏற்படும் போது மூடி விடவும் முடியும். |
| இது ஒரு பெரியஅமைப்பாக இருப்பதால் இதை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதில் மாற்ற இயலாது | ஒவ்வொரு கிளையும் சிறிய அளவிலேயே இயங்குவதால் விற்பனை குறையும் பொழுது அதை அதே நகரில் வேறு ஒரு நல்ல இடத்திற்குமாற்றிக்கொள்ள முடியும். |
| அன்றாட செலவுகளும், மேல் செலவுகளும் அதிகம் இதனால் பொருள்களின் விற்பனை விலையும் அதிகம். | மொத்தக் கொள்முதல், செலவுகளில் சிக்கனம் ஆகியவற்றால் மடங்குக் கடையின் விலை சந்தை விலைக்கு சமமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும். |
| ஓய்வறைகள், சிற்றுண்டிச் சாலைகள் போன்ற வசதிகள் உள்ளன. | எவ்வகை வசதிகளும் கிடையாது. |
| கடன் விற்பனை செய்வதால், வாராக்கடன் எற்படுகிறது. | ரொக்க விற்பனை செய்வதால், வாராக்கடன் நட்டம் எற்படுவது இல்லை. |

**43ஆ இரயில் போக்குவரத்தின் நன்மைகள்:** 1. **உகந்தவை** பளுவும்,பருமனும் மிக்க பொருட்களை நெடுந்தொலைவிறகுக் கொண்டு செல்வதற்கு இரயில்கள் மிகவும் எற்றவை. டீசல் இயந்திரங்கள் தோன்றியதற்குப் பிறகு மோட்டார் போக்குவரத்து மலிவானதாக ஆகியதும், லாரிகள் மிக அதிகமான பொருள்களை ஏற்றிச் செல்லும் திறன் பெற்றதும் உண்மையே. இருப்பினும் இரயில்கள் இந்த அம்சத்தில் அவற்றின் உயர்வை இன்னும் இழக்கவில்லை. 2. **தொலைதூரப் பயணத்திற்கு மிகச்சிறந்தது** நெடுந்தொலைவுப் போக்குவரத்துக்குச் சாலைப் போக்குவரத்தைக் காட்டிலும் இரயில் போக்குவரத்து மலிவானது. 3. **பாதுகாப்பு** ஏற்றிச் செல்லப்படும் பொருள்களுக்கு, மோட்டார் போக்குவரத்தைக் காட்டிலும் இரயில்கள் மிக்க பாதுகாப்பு அளிக்கின்றன. வெயில், மழை, இன்ன பிறவற்றால் பாதிக்கப்படாதவாறு இரயிலில் மூடிய பெட்டிகளில் பொருள்கள் கொண்டு செல்லப்படுவதை நாம் அறிந்ததே. 4. **குறைந்த இயக்க செலவுகள்** தொடக்க முதல் பெருமளவு இதில் முதலீடு செய்யப்பட்டாலும், குறைந்த இயக்க செலவின் மூலம் எதிர்காலத்தில் இது ஒரு மலிவான போக்குவரத்து முறையாகி விடுகிறது. 5. **நம்பகமான தன்மை** இது ஒழுங்காக நடைபெறக் கூடியதும், நம்பகமானதுமான போக்குவரத்தாகும். இது முறையாக கால அட்டவணைப்படி ஆண்டு முழுவதும் நடைபெறவல்லது. மழையோ, வெய்யிலோ, எதுவாயினும் இரயில் போக்குவரத்து தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும். 6. **விரைவு** இரயில்கள் விரைவுமிக்கவை. எனவே, நெடுந்தொலைவுகளுக்குப் பொருட்களை ஏற்றிச் செல்ல இவை மோட்டார் போக்குவரத்தைக் காட்டிலும் குறைந்த காலமே எடுத்துக் கொள்கின்றன.

**44.அ. இறக்குமதி வணிக நடைமுறைகள்:** 1. **வியாபார விசாரணை** : இறக்குமதி செய்யும் எண்ணமுள்ளவர், ஏற்றுமதி செய்ய இருப்பவர்களிடம் வியாபார விசாரணை செய்கிறார். பொருள்களின் விலை, தரம், வடிவமைப்பு, அளவு, பணம் செலுத்தும் முறைகள், பொருள் வழங்கல் நிபந்தனைகள் இவற்றைப்பற்றி பொருள் வாங்க எண்ணமுள்ளவரே அல்லது அவரது முகவரோ விசாரணை செய்கிறார்.ஏற்றுமதியாளர் அவ்விசாரணைக்கு பதில் அனுப்புகிறார். இவை ""விலைப்புள்ளி" என்றும் அழைக்கப்படுகின்றன. 2. **இறக்குமதி உரிமம் மற்றும் பங்கு அளவை பெறுதல்** : பொருள்களை இறக்குமதி செய்வது, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தினால் (1947)-ல் கடடுப்படுத்தப்படுவதால், இறக்குமதி செய்ய விரும்புவர் உரிமம் வழங்கும துறையிடமிருந்து உரிமம் பெற வேண்டும். இறக்குமதி உரிமமானது, பொது உரிமமாகவோ அல்லது குறிப்பிட்ட உரிமமாகவோ இருக்கலாம்.இறக்குமதி உரிமம் இரு பிரதிகளாக வழங்கப்படுகிறது. 3. **அந்நியச் செலாவணியைப் பெறுதல்:** இறக்குமதியாளர் ஏற்றுமதி செய்யும் நாட்டுக்கு, அந்நாட்டின் செலாவணியிலேயே பணம் தரவேண்டியிருப்பதால், இறக்குமதியாளர் உரிமம் பெற்ற பிறகு, தேவையான அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது.இந்தியாவில் இந்திய மைய வங்கி அந்நியச் செலாவணி பயன்பாட்டை நெறிபடுத்துவதற்கு அதிகாரம் படைத்தது. 4. **சரக்குத் தேவைக்கான குறிப்பீடு அல்லது ஆணை பிறப்பித்தல்** : இறக்குமதி உரிமம் மற்றும் தேவையான அளவு அந்நியச் செலாவணி பெற்றபின் இறக்குமதியாளர் சரக்குத் தேவைக்கான குறிப்பீடு அல்லது ஆணையை பிறப்பிக்கிறார். சரக்குத் தேவை குறிப்பீடு என்பது ஒரு இறக்குமதியாளர், ஒரு ஏற்றுமதியாளரிடம் குறிப்பிட்ட சரக்குகளை அனுப்புமாறு பிறப்பிக்கும் ஒரு ஆணையாகும். இதில் இறக்குமதி செய்யப்படும் சரக்குகள் பற்றிய முழு விபரங்கள், விலை பற்றிய நிபந்தனைகள், கப்பலின் ஏற்றப்படும் விபரங்கள், சரக்குப் பட்டுவாடா, பணம் செலுத்தும் முறை போன்றவை இருக்கும். **சரக்கு தேவை குறிப்பீடு மூன்று வகைப்படும்**. அ. திறந்த சரக்குத் தேவை குறிப்பீடு ஆ. மூடப்பட்ட சரக்குத் தேவை குறிப்பீடு இ. உறுதி செய்யும் சரக்கு தேவை குறிப்பீடு 5. **கடன் கடிதம் பெற ஏற்பாடு செய்தல்** : இறக்குமதியாளரின் மீது ஏற்றுமதியாளர் வரையும் மாற்றுமுறை உண்டியல் தன்னிடம் வரும்போது அதற்கு பணம் தரப்படும் என்று, இறக்குமதியாளருடைய வங்கியின் உறுதிமொழியே கடன் கடிதமாகும். இறக்குமதியாளரின் நாணயத்தன்மையை உறுதி செய்வதற்காகவே இக்கடிதம் பெறப்படுகிறது. 6. **கப்பல் ஆவணங்களைப் பெறுதல்** : சரக்கு ஆணையையும்

கடன் கடிதத்தையும் பெற்ற பிறகு, ஏற்றுமதியாளர் சரக்குகளை கப்பலில் ஏற்றுகிறார். இதன்பிறகு ஏற்றுமதியாளர், இறக்குமதியாளருக்கு ஒரு ஆலோசனை குறிப்பு சீட்டு அனுப்புவதன் மூலம், சரக்குகள் அனுப்பப்பட்டதை தெரிவிக்கிறார். இந்த ஆலோசனை குறிப்புச் சீட்டு, கப்பல் சேருமிடத் துறைமுகத்திற்கு வந்துசேரும் உத்தேசத் தேதியை இறக்குமதியாளருக்குத் தெரிவிக்கிறது. இதன்பிறகு, ஏற்றுமதியாளர் அனுப்பிய சரக்குகளின் மதிப்பிற்கு ஈடான தொகைக்கு இறக்குமதியாளரின் வங்கி மீது மாற்றுமுறை உண்டியல் தயாரிக்கிறார். இந்த மாற்றுமுறை ஆவணம் தேவையான கப்பல் ஆவணங்களுடன் அனுப்பப்பட்டால், அது "ஆவணங்களுடன் கூடிய உண்டியல்" என்றழைக்கப்படுகிறது. இதில்,1. மாற்றுமுறை உண்டியல் 2. கப்பல் ஆவணங்கள் ஆகியவை அடங்கியுள்ளன. கப்பல் ஆவணங்களில் கப்பல் ரசீது, காப்பீடு ஆவணங்கள், உற்பத்தியிட சான்றிதழ், தூதரக பட்டியல் ஆகியவை அடங்கும். **7. சரக்குகளை எடுத்துச் செல்லுதல்** சரக்குகளுக்கான உரிமை சான்று ஆவணங்களை பெற்றபின் இறக்குமதியாளர் கப்பலின் வருகைக்காக காத்திருக்கிறார். கப்பல் வந்து சேர்ந்தபின் இறக்குமதியாளர் சரக்குகளை எடுத்துச் செல்வதற்காக சுங்க அலுவலங்கத்திற்கு இறக்குக்கூலி, இறக்குமதி வரி, சுங்க வரி மற்றும் இதர துறைமுக வரிகளைச் செலுத்தி பொருட்களை பெற்றுக் கொள்கிறார்.

**44.ஆ) காப்பீட்டின் தத்துவங்கள் (அல்லது) காப்பீட்டின் கோட்பாடுகள்**

(1) **காப்பீடு பெறுநலன் :** காப்பீடு பெறுநலன் என்பது குறிப்பிட்ட நிதி சார்ந்த அக்கறை இருக்க வேண்டும். கடல்சார் காப்பீட்டில் நட்டம் ஏற்படும் நேரத்தில், காப்பீடு பெருநலன் இருக்க வேண்டும்.தீக்காப்பீட்டில் காப்பீடு பெறுநலன், ஒப்பந்தம் ஏற்படும் போதும், நட்டம் ஏற்படும் போதும் இருக்க வேண்டும்.ஆனால், ஆயுள் காப்பீட்டுறுதியில், காப்பீட்டு பெறுநலன் காப்பீடு ஒப்பந்தம் செய்யும் பொழுதே இருத்தல் வேண்டும்.(2)**மிக்க நம்பிக்கை :** காப்பீடு மிக்க நம்பிக்கை அடிப்படையிலான ஒப்பந்தம் ஆகும். இதில் காப்பீடு பெறுநர் மற்றும் தருநர் இருவரும் அனைத்து கருப்பொருள் உண்மைகளையும் ஒருவருக்கு ஒருவர் வெளிப்படுத்திட வேண்டும்.(3)**ஈட்டுறுதி:** ஒருவருக்கு ஏற்படும் உண்மையான நட்டத்தை ஈடுசெய்வதையே ஈட்டுறுதி ஆகும். ஈட்டுறுதி கோட்பாடு, சொத்துக் காப்பீட்டிற்கு மட்டும் பொருந்தும். எந்த சூழ்நிலையிலும் காப்பீடு பெறுநர் உண்மை நட்டத்திற்குக் கூடுதலாக எதையும் பெற்றுவிட முடியாது. (4)**அண்மைக் காரணம்:** ஓர் இழப்பு ஏற்பட காப்பீடு செய்யப்பட்ட இடர் அண்மைக் காரணமாக இருந்தால் மட்டுமே ஒப்பந்தப்படி காப்பீடு தருநர் பொறுப்பாவார். (5)**பகிர்ந்தளித்தல்:** காப்பீடு பெறுநர், தன் சொத்தின் மீது ஒன்றிற்கு மேற்பட்ட காப்பீடு தருநரிடம் காப்பீடு செய்திருந்தால், ஏற்படும் இழப்பினை தொகைக்கு ஏற்ப, விகிதாசார அடிப்படையில் அவர்களுக்குள் பகிர்ந்து அளித்தல் வேண்டும். (6)**பகர உரிமை:** பகர உரிமை என்பது காப்பீடு பெறுநர், தனக்கு ஏற்பட்ட இடரை காப்பீடு தருநர் ஈடு செய்வதுடன், இடர் தொடர்பான அனைத்து உரிமைகளையும் காப்பீடு தருநருக்கு மாற்றித் தருவதாகும்.

**45.அ வான்வழிப் போக்குவரத்தின் நன்மைகள் 1.** விமானங்கள் முறையான, திறமையான, விரைவான போக்குவரத்து வசதியை நல்குகின்றன. **2.** விமானப் போக்குவரத்தின் மாபெரும் சிறப்பு, அதன் வேகமேயாகும். தொலைவு அதிகரிக்க, அதிகரிக்க இந்த நன்மை அதிகரிக்கிறது. ஓயாது சுறுசுறுப்பாக உழைக்கும் வணிகருக்கும், உயர் பதவி வகிக்கும் அலுவலர்களுக்கும் விரைந்து சேர்ப்பிக்கப்பட வேண்டிய பொருள்களுக்கும் விமானப் போக்குவரத்தின் இச்சிறப்பு நற்பயனாக மிளிர்கிறது. **3.** இரயில் அல்லது மோட்டார் போக்குவரத்து போலன்றி, வான்வழிப் போக்குவரத்துக்குப் பெருத்த முதலீடு செய்து பாதை அமைக்கும் தேவையோ, அதைப் பராமரிக்கும் தேவையோ இல்லை. **4.** உயர்ந்த மலைகளோ, ஆழ்கடல்களோ விமானப் போக்குவரத்துக்கு ஒரு தடையாக அமைய முடியாது. **5.** வேறு எந்தப் போக்குவரத்துச் சாதனத்தாலும் அடைய முடியாத பகுதிகட்கு விமானப் போக்குவரத்து மனிதர்களையும், சரக்குகளையும் எடுத்துச் செல்லும் திறன் பெற்றது. நிலச்சரிவு, வெள்ளம் போன்ற இடர் நிகழ்ந்து ஏனைய போக்குவரத்துச் சாதனங்கள் நிலைகுலைந்து செயலற்றுப் போகும் நிலையில், மரணத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு தவிக்கும் மக்களைக் காப்பாற்றுவதற்குப் பேருதவியாக வருவது விமானப் போக்குவரத்தே. **6.** மற்ற வாகனப் போக்குவரத்துகள் சரக்கேற்ற பயன்படுத்த இயலாத நிலையில் இதனை பயன்படுத்தலாம். சண்டை மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்படும் போது மனிதனை ஆபத்துகளிலிருந்து விமானப் போக்குவரத்து காப்பாற்றுகிறது. **7.** குறைந்த பருமனும் எடையும் நிறைந்த மதிப்பும் வாய்ந்த பொருள்கள், விரைந்து சேர்ப்பிக்கப்பட வேண்டிய அழுகிப் போகக் கூடிய பொருள்கள் ஆகியவற்றை கொண்டு செல்வதற்கு இப்போக்குவரத்து மிகவும் ஏற்றது. விமானப் போக்குவரத்தில் ஏற்றிச் செல்லும் சரக்குகள் சிறிய அளவில் உள்ளது. ஆதலினால், சுங்க சடங்குகள் விரைவில் நிறைவேற்றப்படுகின்றன.

**45.ஆ.மொத்த வியாபாரிகளின் நடைமுறைப் பணிகள்:** (அ)**கொள்முதல் மற்றும் ஒன்று திரட்டுதல்:** 1)பலவகைப்பட்ட பொருட்களை உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கி, இனவாரியாக ஒன்றுதிரட்டி இருப்பு வைத்து சில்லறை வியாபாரிக்கு விற்பார். 2)குறிப்பிட்ட காலத்தில் மட்டும் விற்கும் பொருட்களை அந்தந்த காலத்தில் வாங்கி வைத்து விற்பனை செய்வார். 3)தேவைகளின் வளர்ச்சிகளில் கவனம் செலுத்தி, புதிய தயாரிப்புகளை வாங்கி வைப்பதும், தேவையற்ற தயாரிப்புகளை வாங்காது விட்டு விடுவதும் மொத்த வியாபாரிகளின் இயல்பான செயல்கள் ஆகும்.

**(ஆ)இருப்புவைத்தல் அல்லது பண்டகக்காப்பு:** 1)உற்பத்திக்கும், நுகர்வுக்கும் இடையே ஏற்படும் கால இடைவெளியை மனதிற்கொண்டு, பொருட்கள் கிடைக்கும் பொழுதே வாங்கி இருப்பு வைத்து, சில்லறை வியாபாரிக்கு சிறு சிறு அளவில் வியாபாரம் செய்வார். 2)பொருட்களை அழிவிலிருந்து பாதுகாத்து, சந்தையில் தேவைப்படும் பொழுதெல்லாம் கிடைக்குமாறு செய்வார்.**(இ) போக்குவரத்து வசதி அளித்தல்:** 1)சில்லறை வியாபாரிகளின் கடைகளுக்குத் தேவைப்படும் பொழுதெல்லாம் வாகனங்கள் மூலம் பொருட்களை அனுப்பி வைப்பார். 2)பொருட்களை மொத்தமாக வாங்கி இருப்பு வைத்து அனுப்புவதன் மூலம் அனுப்புகை கட்டணங்களில் சிக்கனத்தை கடைப்பிடிக்கிறார்.

**(ஈ)நிதிவசதியை தருதல்:** 1)மொத்த வியாபாரிகள் சந்தையில் அதிகமான நிதிவசதியை உருவாக்குவதன் மூலம் வியாபாரத்துறையில் மிகச் சிறந்த முறையில் பங்கேற்கிறார்கள். 2)சில்லறை வியாபாரிகளுக்குத் தேவைப்படும் பொருட்களைக் கடனாக வழங்கி, வியாபாரத்தைப் பெருக்க வழி வகுப்பதால் உற்பத்தியாளர்களின் நிதிச்சுமை மிகவும் குறைகிறது.

**(உ)இடர்பாடுகளை ஏற்றல்:** 1)பொருட்களின் விலைவீழ்ச்சி, கெட்டுப்போதல், பொருட்களின் அழிவு, இருப்பு வைப்பதால் ஏற்படும் பிற இழப்புகள் அனைத்தையும் மொத்த வியாபாரிகள் ஏற்றுக் கொள்கின்றனர். 2)சில்லறை வியாபாரிகளால் ஏற்படும் வாராக்கடன் இழப்பையும் மொத்த வியாபாரிகளே ஏற்றுக் கொள்கின்றனர்.

**(ஊ)தரப்படுத்துதல்,சிப்பம்கட்டுதல்,கட்டுமம்செய்தல்:** 1)தரம், வகை, வடிவு, கசிவு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றிக்கு ஏற்ப உற்பத்திப் பொருட்களை மொத்த வியாபாரிகள் தனித் தனியாகப் பிரித்து வகைப்படுத்தி விடுகின்றனர். 2)பெரும் சிப்பங்களை சிறு சிறு சிப்பங்களாக கட்டுமம் செய்து சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகம் செய்துவிடுகிறனர். **(எ)சந்தை நிலவரங்களைத் தருதல்:** 1)பயனுள்ள சந்தை நிலவரங்களைக் கண்டறிந்து உற்பத்தியாளர்களுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் அவ்வப்போது கூறி வருவார்கள். 2)நுகர்வோரின் தேவை, விருப்பம் மற்றும் புதிய நாகரீகங்களைப் பற்றி உற்பத்தியாளர்களுக்கு எடுத்துக் கூறுவதால், அதற்கேற்ப பொருட்களைத் தயாரித்து வியாபாரத்தை பெருக்கிக் கொள்ள மொத்த வியாபாரிகள் உதவுகின்றனர். **(ஏ) பரவலாக்குதல் மற்றும் விற்பனை செய்தல்:** 1)பல்வேறு இடங்களுக்குப் பரவலாகச் சென்று அடையுமாறு விற்பனை செய்யும் சில்லறை வியாபாரிகளுக்கு, மொத்த வியாபாரிகள் விநியோகம் செய்கின்றனர். 2)பரவலாக ஆங்காங்கே சிதறி இருக்கும் சில்லறை வியாபாரிகளுக்கு மொத்த வியாபாரிகள் தங்கள் பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

**46அ.வணிகத்தின் உட்பிரிவுகள்** (அ)**வியாபாரம்:** 1) பொருட்களை பரிமாற்றம் செய்தல் அல்லது வாங்கி விற்றல் வியாபரம் எனப்படும். 2)உற்பத்தியாளர்களிடம் இருந்து

மொத்த வியாபாரிகள், பொருட்களைப் பெற்று அதை சில்லறை வியாபாரிகளுக்கு சிறு சிறு அளவில் விற்கின்றனர். 3)நுகர்வோர் தத்தம் தேவைகளுக்குகேற்ப பொருட்களை சில்லறை வியாபாரிகளிடமிருந்து வாங்கிக் கொள்கின்றனர். 4)உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே நிகழும் பொருட்கள் பரிமாற்றத்தில் ஆள்சார் தடையை வியாபாரம் நீக்குகிறது. **(ஆ) போக்குவரத்து:** 1)போக்குவரத்தின் மூலம் பண்டங்கள், உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலிருந்து தேவை உள்ள இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. 2)உற்பத்திக்கு தேவைப்படும் கச்சா பொருட்களை தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லவும், தொழிலாளர்களை அழைத்துச் செல்லவும் போக்குவரத்து பயன்படுகிறது. 3) இதன்மூலம் போக்குவரத்து இடத்தடையை அகற்றும் பணியை செய்கிறது. **(இ) பண்டகக்காப்பகம்** 1)பருத்தி, சணல், உணவு தானியங்கள்,சர்க்கரை முதலான பொருட்களின் உற்பத்தி சில குறிப்பிட்ட பருவகாலங்களில் தான் விளைவிக்கப் படுகின்றன. ஆனால், அவற்றின் தேவை ஆண்டு முழுவதும் இருக்கும். 2) ஆண்டு முழுவதும் இப்பொருட்கள் தடையின்றி கிடைக்கப் பண்டகக்காப்பகம் தேவைப்படுகிறது. 3)பண்டகக்காப்பாகம் காலத்தடையை நீக்கும்.
**(ஈ) வங்கிப் பணிகள் :** 1)நிதியே வாணிகத்தின் உயிர்நாடியாகும். 2)வணிகத்தை தொடர்ந்து நடத்த வணிகர்களுக்கு நிதி தேவைப்படுகிறது. 3)இந்நிதித் தேவைகளை பற்பல வணிக வங்கிகளும் நிதி நிறுவனங்களும் பூர்த்தி செய்து வருகின்றன. **(உ) விளம்பரமும் விற்பான்மையும் :** 1)நுகர்வோர் சந்தையில் கிடைக்கும் பல்வகைப்பட்ட பொருட்களைப் பற்றிய எல்லா விபரங்களையும் அறிந்து வைத்திருப்போர் எனக் கூற இயலாது. 2)விளம்பரமும், விற்பான்மையும் நுகர்வோர்க்குப் பொருட்கள் தொடர்பான எல்லாச் செய்திகளையும், அவற்றின் சிறப்புகளையும், பயன்படுத்தும் முறைகளையும் எடுத்துச் சொல்லி, விழிப்புணர்ச்சி ஏற்படுத்துகின்றன. **(ஊ)காப்பீடு :** 1)வியாபாரத்தில் தோன்றும் இடர்பாடுகளில் இருந்து, ஒரு வியாபாரி தன்னைக் காத்துக்கொள்ள செய்யும் ஏற்பாடே காப்பீடு ஆகும். 2)ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொருட்களைக் கொண்டு செல்லும் போது தீப்பிடித்தல் மற்றும் திருட்டு போன்றவற்றால் ஏற்படும் இடர்பாடுகளில் இருந்து பாதுகாத்துக்கொள்ள காப்பீடு அவசியம் ஆகும். **(எ) தகவல் தொடர்பு :** 1)உற்பத்தியாளர் தமது உற்பத்திப் பொருட்களைப் பற்றி நுகர்வோருக்கு தெரியப்படுத்தவும், நுகர்வோர் தாம் விரும்பும் பொருட்களைப் பற்றி விற்பவருக்கு தெரியப்படுத்தவும் தகவல் தொடர்பு சாதனங்கள் பெரிதும் உதவிபுரிகின்றன. 2)அஞ்சல் நிலையம், தனியார் கூரியர் சர்வீஸ், ∴பேக்ஸ், தொலைபேசி, செல்போன் போன்றவை இத்தகு செய்திப் பரிமாற்றங்களுக்குப் பெரிதும் உதவி வருகின்றன.

**46ஆ.உலக வணிக அமைப்பின் நன்மைகள் :** 1. இவ்வமைப்பு அமைதியை மேம்படுத்த உதவுகிறது. 2. உறுப்பினருக்கிடையேயான வேறுபாடுகளை ஆக்கப்பூர்வமான முறையில் கையாளப்படுகின்றன. 3. விதிமுறைகள் எல்லோருக்கும் ஏற்புடையதாக உள்ளது. 4. தடையற்ற வணிகம் வாழ்க்கைச் செலவைக் குறைக்கிறது. 5. பல்வேறு வகையான தரமுடைய பொருட்களை இது வழங்குகிறது.

**47அ. பல்வேறு வகையான பண்டக காப்பகங்கள்:**

**உரிமையாளர் அடிப்படையில் பண்டகசாலைகளின் வகைகள்:**

**1.தனியார் பண்டகசாலை:**பெரியளவு உற்பத்தியாளர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் ஏல விற்பனையாளர் ஆகியோர், தொடர்ந்து சீராக பொருட்களை வழங்குவதற்காக தங்களுடைய சொந்த பண்டகசாலைகளை வைத்திருக்கிறார்கள்.

**2.பொது பண்டகசாலை:** சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரிகள், பொருள் இருப்பு வைத்திருப்போர் மற்றும் பொதுமக்களுக்கு வைப்பிடுதல் சேவை செய்வதற்காக தொடங்கப்பட்டுள்ளன.

இவ்வகை பண்டகசாலைகளில் வைப்பிட்ட பொருட்களுக்கு வாடகை பெறுவதுடன் பார்வையிடுதல், கட்டுமானம் செய்தல், கப்பலில் ஏற்றுதல் மற்றும் பட்டியல் தயாரித்தல் போன்ற சேவைளுக்கு சேவைக்கட்டணமும் பெறுகின்றன.

இவை இருப்புபாதை மற்றும் நெடுஞ்சாலைகள் உள்ள முக்கியமான இடங்களில் அமைக்கப்படுகின்றன.

**3.கூட்டுறவு பண்டகசாலை:** இவ்வகை பண்டக சாலைகள் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினரல்லாதோரின் வசதிக்காக அமைக்கப்படுகிறது.

ஆர்வமுள்ளவர்கள் இவ்வித கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி உறுப்பினர்களாகின்றனர்.

**சேவையின் அடிப்படையில் பண்டகசாலைகளின் வகைகள்:**

**1.பிணைய காப்பு பண்டகசாலை:** இவ்வகை பண்டக சாலைகள் அரசிடம் உரிமம்பெற்று, பண்டங்களை பிணையத்தின் அடிப்படையில் காப்பகங்களில் வைத்திருந்து கொடுக்க எற்றுக் கொள்ளப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள் சுங்கவரி கட்டும் வரை பண்டக காப்பகத்தில் வைத்திருக்கப்படுகின்றன. சுங்கவரி கட்டிய பிறகுதான் பண்டகசாலையிலிருந்து சரக்குகள் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படும்.

இவ்வகை பண்டகசாலைகள் துறைமுகத்தின் அருகில் அமைக்கப்பட்டிருக்கும்.

**2.பொது பொருள் பண்டகசாலை:** சிறப்பாக பாதுகாக்கப்பட வேண்டிய பொருட்களைத் தவிர, மற்ற பொருட்கள் யாவும் இப்பண்டகசாலையில் இட்டு வைக்கப்படும்.

எனவே, இப்பண்டக சாலைகளை சுருக்கமாக இளைப்பாறுமிடம் எனவும் கூறலாம். இவ்வகை பண்டகசாலைகளை உற்பத்தியாளர்கள்,

மொத்த மற்றும் சில்லரை விற்பனையாளர்கள் பயன்டுத்திக் கொள்கின்றனர்.

**3.சிறப்பு பொருள் பண்டகசாலை:**இவ்வகை பண்டகசாலைகள் புகையிலை, பருத்தி, கம்பளி ஆகிய சிறப்பான பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டி அதற்கென்றே பிரத்யேகமாக கட்டப்பட்டு பயன்படுத்தப்படும்.

**4.குளிர்பதன பண்டகசாலை:** சிலவிதமான பொருட்கள் எதிர்கால நுகர்வுக்காக குளிரூட்டத்தில் வைத்திருக்க வேண்டியுள்ளது. உ.ம். பழங்கள், மீன், இறைச்சி, முட்டை.

**5.திறந்த வெளி கிடங்கு:** இவ்வகை கிடங்குகள் அமெரிக்காவில் அதிக வரவேற்பு பெற்றிருக்கிறது. வங்கிகளிடமிருந்து நிதி உதவி பெறுவதற்காக இவ்வகை காப்பங்களில் தொழில் வல்லுநர்கள், மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் பொருள்களை இட்டு வைக்கின்றனர்.

**6.வீட்டு உபயோக பொருட்கள் பண்டகசாலை:** கிராமப்புறங்களில் விவசாயிகள் தங்களது எதிர்காலத் தேவைக்கு, விவசாயப் பொருட்களை இப்பண்டகத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கின்றனர்.

**7.தானிய தூக்கிகள்:** இது ஒரு நவீனமுறை பண்டக பாதுகாப்பாகும். இம்முறையில் மிக அதிக அளவு தானியங்கள், தானிய தூக்கிகளில் பாதுக்காப்பாக வைக்கப்படுகிறது.

**8.முற்ற சேமிப்பு கிடங்கு:** இரும்பு, மூங்கில் போன்ற சீதோஷ்ண நிலையில் அழுகாமல் இருக்கக்கூடிய பொருட்கள் இவ்வகை சேமிப்புக் கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

**9.நிறுவனமுறை பண்டகசாலை:** ஒவ்வொரு நிறுவனமும் செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்து இவ்வகை பண்டகசாலைகளை வைத்திருக்கிறது.

**நிறுவனமுறை பண்டகசாலைகள்**:அ. **இந்திய உணவு கழகம் பண்டகசாலை:** இந்திய அரசின் கட்டாயக் கொள்கையின்படி உணவு தானியங்கள் விசாயிகளிடமிருந்து குறித்த விலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பண்டகசாலையில் வைக்கப்படுகிறது.

இதனால் விவசாயிகளுக்கு நியாயமான விலைகள் கிடைக்கிறது. இது விவசாயிகளுக்கு எதிர்வரும் பருவத்திற்கு விவசாயபொருட்களை உற்பத்தி செய்ய ஊக்கமளிக்கிறது.

குறைந்தபட்ச அளவு சரக்குகளை பண்டகசாலையில் பாதுகாப்பாக வைத்திருப்பதால் நுகர்வோருக்கு அதிக விலையினால் பாதிப்பு ஏற்படாவண்ணம் காக்கிறது

**ஆ.அரசு பண்டகசாலை:** மத்திய, மாநில அரசின் பிரத்யேக உபயோகத்திற்காக இவ்வகை பண்டக சாலைகள் உருவாகின்றன.

**இ.வங்கி கிடங்குகள்:** வங்கியில் கடன் பெறும்பொருட்டு அடமானம் வைக்கப்பட்ட பொருள்கள் இவ்வகைப்பட்ட கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

**ஈ. இருப்புப்பாதை போக்குவரத்து பண்டக சாலை:** இரயில் இருந்து இறக்கி வைக்கப்பட்ட பொருட்கள் அதற்குரிய உரிமையாளர் வந்து எடுத்துச் செல்லும் வரை பண்டகசாலையில் பாதுகாப்பாக வைத்திருக்கப்படுகிறது

**47.ஆ அஞ்சல்வழி வாணிகத்தின் சிறப்புக் கூறுகள் 1. வாடிக்கையாளர்களுடன் தொடர்பு** வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் இதில் நேரடித் தொடர்பு இல்லை. நாடு முழுவதும் நுகர்வோர் பரவியிருப்பதினால் அவர்கள் அனைவரும் தமக்குத் தேவையானப் பொருட்களை அஞ்சல் மூலம் ஆணையிட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

**2. விளம்பரம்** தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள், பருவ இதழ்கள் போன்றவைகளின் மூலம் எல்லா இடங்களுக்கும் அஞ்சல் வழி வாணிக நிறுவனங்கள் பரவலாக விளம்பரம் தருகின்றன.

**3. முகவரிப் பட்டியல் தயார் செய்தல்** முதற்பணியாக முகவரிப் பட்டியல் ஒன்றை அஞ்சல்வழி வாணிகம் தயார் செய்கிறது.

இதில் வாங்கவிருக்கும் வாடிக்கையாளர்களின் பெயர்கள், முகவரி போன்ற விவரங்கள் அதில் குறிக்கப்பட்டிருக்கும்.

**4. சரக்கு ஆணைகளைப் பெற்று சரக்கை அனுப்புதல்** சரக்கனுப்பக் கோரும் ஆணைகளைப் பெற்றவுடன், சரக்குகளை முறையாகக் கட்டுமம் செய்யப்பட்டு, பதிவுப் பார்சல் அஞ்சல் வழியோ அல்லது பதிவு புத்தக அஞ்சல் வழியோ வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படுகிறது.

ஆனால் பொதுவாக இவ்வகைச் சரக்குகள், சரக்கு, மதிப்பு, செலுத்தத்தக்க அஞ்சல் வழியாக அனுப்பப்படுகிறது.

**5. பொருத்தமானப் பொருட்கள்** எல்லாவகைப் பொருள்களும், அஞ்சல் வழி வாணிகத்திற்கேற்றதல்ல. தரப்படுத்தப்பட்டு, வாணிகப் பெயரிடப்பட்ட சரக்குகளே சாலச்சிறந்தவை.

சரக்குகள் அதிக இடத்தை அடைத்துக் கொள்வதாகவும், எடை அதிகமாக உள்ளதனவாகவும் இருக்கக்கூடாது. பொதுவாக கைக்கடிகாரங்கள், பேனாக்கள், புத்தகங்கள், மருந்துகள் போன்றவை இவ்வகையான வாணிகத்திற்கு ஏற்றவையாகும்.